# ஆம்பூர் நகராட்சி

2019-ம் வருடம் அக்டோபர் மாதம் 30-ம் தேதி புதன்கிழமை காலை 11.00மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகளின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.த.சௌந்தரராஜன்.பி.ஏ.,
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

1. இந் நகராட்சியில் 2018-19ம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட பணியான, இந் நகராட்சிக்கு சொந்தமான தார்வழி மற்றும் பெத்லகேம் பகுதி உரகிடங்குகளில் சேகரிக்கப்பட்டுள்ள மரபுவழிக் கழிவுகளை தாதுப்பொருட்களாக (Bio Mining) மாற்றம் செய்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்க வேண்டி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இந்திய அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரக் கட்டணத் தொகை ரூ.3,11,378/-ஐ (ரூபாய் மூன்று லட்சத்து பதினோராயிரத்து முன்னூற்று எழுபத்தெட்டு மட்டும்) சென்னை எலிகண்ட் பப்ளிசிட்டிஸ் நிறுவனத்திற்கு செலுத்த அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:அ.அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி தொகையை வருவாய் நிதியிலிருந்து செலுத்தவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.230/இ1/2018

தீர்மான எண்.59:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

2. இந் நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு தேவையான மளிகைப்பொருட்கள், அரிசி, பால், காய்கறிகள், சமையல் எரிவாயு உருளைகள் வாங்குதல், பில் புத்தகங்கள் அச்சடித்தல், மகளிர் சுயஉதவி குழுவினருக்கு மாத ஊதியம் வழங்குதல் மற்றும் இதர அத்தியாவசிய செலவினங்கள் ஆகியவற்றை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவின தொகை ரூ.30.00 இலட்சத்திற்கும் (ரூபாய்.முப்பது இலட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழய்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.சி2/1667/2014

தீர்மான எண்.60:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

3. இந் நகராட்சியில் Suwasem 2019-20 திட்டத்தின் கீழ் கண்ட பணியினை இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ள தீர்மான எண் 29 நாள்: 27.08.2019–ல் அங்கிகாரம் பெற்று 04.10.2019-ஆம் தேதி ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் பார்வைக்கும், முடிவிற்க்கும் வைக்கப்படுகின்றது.

| பணியின் விவரம் | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருமதி | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| **Rain Water Harvesting Structure – Construction of Desilting Chamber for recharge through bore well in Ambur Municipality..** | 12.00 | 1. எஸ். அருணாசலம்<br>2. எ. வி. நாகராஜன் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு<br>0.85% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு: திட்டப்பணியின் அவசர அவசியத்தை கருதி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ்.அருணாசலம், என்பவருக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்: 219/2019/இ2
தீர்மான எண்.61:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4. இந்நகராட்சியில் கீழ் குறிப்பிட்டுள்ள பணியினை மேற்க்கொள்ளவும், அதற்கதகும் செலவின தொகையினை குடிநீர் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் கோரப்படுகின்றது.

| பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|
| இந் நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு குடிநீர் லாரி எண் **TN23-W8626**-க்கு தகுதிச்சான்று பெற பழுது பார்ப்பு பணி மேற்கொள்ளுதல். | 1,10,000/- |

குடிநீர் விநியோகப்பணியின் அவசர அவசியத்தை கருதி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 09.10.2019-ஆம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| பணிமனை பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|
| 1.திரு. கோவிந்தசாமி.<br>பவானி ஆட்டோ கேரேஜ், ஆம்பூர் | 1,10,000/- |
| 2.விஜய் டிராக்டர் ஓர்க்ஸ், பைபாஸ் சாலை, ஆம்பூர் | 1,12,000/- |

அலுவலகக்குறிப்பு:
1. மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகைக்கு அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை குடிநீர் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.
2. குடிநீர் விநியோகப்பணியின் அவசர அவசியத்தை கருதி, தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும், பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண். 926/2019/இ2

தீர்மான எண்.62:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் நாய்களை பிடித்து கருத்தடை செய்து தடுப்பூசி போட்டு பராமரித்து மீண்டும் பிடித்த இடத்திலேயே விடுதல் பணிக்கு தீர்மான எண்.220 நாள் 6.3.2019ல் ரூ.5.00லட்சத்திற்கு (ரூபாய் ஐந்துலட்சம் மட்டும்) அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 10.10.2019-ம் தேதியன்று முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | ஒப்பந்ததாரரின் பெயர் (ம) விலாசம் திருவாளர்கள் | நாய்பிடித்து அறுவை சிகிச்சை செய்ய தொகை ரூ. (நாய் ஒன்றிற்கு) |
|---|---|---|
| 1 | **Voice for Animals Charitable Trust Chennai.07** | **Rs.700/-** (ரூபாய் ஏழு நூறு மட்டும்) |
| 2 | **Heart to Heart VET Foundation Chennai.07** | **Rs.750/-** (ரூபாய் ஏழு நூற்று ஐம்பது மட்டும்) |

அலுவலகக்குறிப்பு: அ. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் நாய்களை பிடித்து கருத்தடை செய்து தடுப்பூசி போட்டு பராமரித்து மீண்டும் பிடித்த இடத்திலேயே விடுதல் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **Voice for AnimalsCharitable Trust Chennai.07** அவர்கள் கொடுத்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளிக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

ஆ. அவசர அவசியம் கருதி, தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1086/2019/எச்1

தீர்மான எண்.63:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

6. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணிப்புரிந்து ஓய்வுபெற்ற கீழ்க்கண்ட பணியாளர்களுக்கு 1.6.1988 முதல் 31.5.1989 வரை 5வது ஊதியக்குழுவின் நிலுவைத்தொகை மற்றும் வட்டியுடன் ரூ.217789/-(13481+204308) (ரூபாய் இரண்டு லட்சத்து பதினேழாயிரத்து எழுநூற்று எண்பத்தி ஒன்பது மட்டும்) வழங்க அனுமதி கோரப்படுகிறது.

| வ. எ. | ஓய்வுபெற்ற பணியாளர்கள் பெயர் திருவாளர்கள் | பதவி | நிலுவைத் தொகைநாட்கள் | | வழங்கப்பட வேண்டிய தொகை ரூ | வட்டித் தொகை ரூ | மொத்தம் ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| | | | முதல் | வரை | | | |
| 1 | எம்.சுதந்திரம் | துப்புரவு அலுவலர் | 1.6.88 | 31.5.1989 | 4452/- | 67458/- | 71910/- |
| 2 | சி.மணவாளன் | துப்புரவு பணி மேற்பார்வை யாளர் | 1.6.88 | 31.5.1989 | 2042/- | 30938/- | 32980/- |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | எம்.ரவேந்திரன் | துப்புரவு பணி மேற்பார்வை யாளர் | 1.6.88 | 31.5.1989 | 2234/- | 33863/- | 36097/- |
| 4 | கே.துரைசாமி | துப்புரவு பணி மேற்பார்வை யாளர் | 1.6.88 | 31.5.1989 | 2234/- | 33863/- | 36097/- |
| 5 | கே.எ.சுப்பிரமணி | துப்புரவு பணி மேற்பார்வை யாளர் | 1.6.88 | 31.5.1989 | 2519/- | 38186/- | 40705/- |
| | மொத்தம் | | | | 13481/- | 204308/- | 217789/- |

அலுவலகக்குறிப்பு: அ.வழங்கலாம்.

ஆ. மேற்படி ஓய்வுபெற்ற பணியாளர்க்ளுக்கு 5வது ஊதியக்குழு நிலுவைத்தொகை மற்றும் வட்டி ஆகிய தொகையை வருவாய் நிதியிலிருந்து வழங்கலாம்.

ந.க.எண்.853/2019/எச்1

தீர்மான எண்.64:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

7. இந்நகராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்கள் அன்னார் பணிபுரிந்த காலத்தில் 5வது ஊதிய குழுவின் நிலுவை தொகை மற்றும் அதற்கான வட்டி தொகையினை வழங்க கோரியுள்ளனார் அதன்படி கீழ்கண்ட ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு 5வது ஊதிய நிலுவை மற்றும் வட்டி கணக்கீட்டு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி<br>திரு/திருமதி/செல்வி | அசல் தொகை<br>ரூ | வட்டி தொகை<br>ரூ | மொத்தம்<br>ரூ |
|---|---|---|---|---|
| 1. | டி.ராஜேந்திரன்<br>வருவாய் உதவியாளர்(ஓய்வு) | 1996/– | 30538/– | 32534/– |
| 2. | ஜே.மணி<br>மீட்டர் ரீடர்(ஓய்வு) | 1803/– | 27316/– | 29119/– |
| 3. | ஏஸ்.ஏ.அப்துல் சுபான்<br>மேலாளர்(ஓய்வு) | 2356/– | 35712/– | 38068/– |
| 4. | முனிகண்ணுவில்லயம்<br>பிட்டர் நிலை.2(ஓய்வு) | 2170/– | 32903/– | 35073/– |
| 5. | மோகன்தாஸ்<br>மின்பணியாளர் நிலை.1(ஓய்வு) | 1796/– | 27774/– | 29570/– |
| 6. | எ.செல்வராஜ்<br>அலுவலக உதவியாளர்(ஓய்வு) | 1778/– | 26934/– | 28712/– |
| 7. | ஜி.ஆனந்தன்<br>இளநிலை உதவியாளர்(ஓய்வு) | 2101/– | 31836/– | 33937/– |
| 8. | கே.கேசவன்<br>பதிவறை எழுத்தர்(ஓய்வு) | 391/– | 5929/– | 6320/– |
| | மொத்தம் | 14391/– | 191626/– | 218942/– |

**5வது ஊதிய நிலுவை தொகை ரூ.14391 மற்றும் வட்டி தொகை ரூ.191626 மொத்தம் ரூ218942/– வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

**அ. அனுமதி வழங்கலாம்**

**ஆ.5வது ஊதிய குழு நிலுவை தொகை மற்றும் வட்டி தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் வட்டி தொகை பெறப்பட்டவுடன் வருவாய் நிதியில் ஈடு செய்து கெள்ள அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.883/2019/பி2**

தீர்மான எண்.65:-அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

ஓம்/-த.சௌந்தரராஜன்
தனி அலுவலர்

/உண்மை நகல்/

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி